# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

**Tamilnadu Government Employees' Association**

(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தோழத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தாங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தீ.கலைசெல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடக செய்தி 17 / 2018 நாள் : 23.12.2018

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு,சுப்பிரமணியன். பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் இணைந்து வெளியிடும் பத்திரிகை செய்தி :

ஊடகச் செய்தி

## 2019 ஜனவரி 8-9 தேதிகளில் நடைபெற உள்ள அகில இந்திய வேலை நிறுத்தத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பங்கேற்பு

மத்திய அரசு கடைபிடித்துவரும் மக்கள் விரோத பொருளாதாரக் கொள்கை இந்திய சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை பாதிக்கச் செய்துள்ளதுடன் உள்நாட்டு தொழில் வளர்ச்சி சமூக ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவையும் பாதிக்கப்பட்டு ஒட்டுமொத்தமாக நாடு தழுவிய அளவில் சமூக, பொருளாளதார மற்றும் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. தொழிலாளர் நலச் சட்டங்கள் மாற்றப்பட்டுள்ளதுடன் அவற்றை பெரு முதலாளிகளுக்கு சாதகமாக்கியிருப்பதும், தொழிற் சங்கங்களை புறக்கணிப்பது என்ற போக்கும், தொழிலாளர்கள் மீதான தாக்குதல் நடத்துவது என்பதும்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

தொடர்கதையாகி வருவதுடன், கட்டுப்படுத்தப்படாத விலைவாசி உயர்வும், உச்சவரம்பு உயர்த்தப்படாத வருமான வரி, அத்தியாவசியப் பொருட்கள் மீதான ஜிஎஸ்டி வரி/ தொழில் வரி போன்றவற்றாலும் அரசு ஊழியர் சமுதாயம் மிகபெரிய பாதிப்பை சந்தித்து வருகிறது.

சமூகப் பாதுகாப்பு திட்டமாக இருந்து வந்த ஓய்வூதியத் திட்டம் 2003ம் ஆண்டு முதல் விலக்கப்பட்டு புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் என்று அமல்படுத்தப்பட்டிருப்பதும், குறைந்தபட்ச ஊதியம் ரூ.18000/- என அனைத்து பிரிவு அரசு ஊழியர்களுக்கும் நிர்ணயிக்கப்படாததும், பல்வேறு கொத்தடிமை ஊதிய முறைகளில் அரசு ஊழியர்கள் நியமனம் செய்யப்டுவதும் தொடர்ந்து கொண்டுள்ளது.

இவையெல்லாம் மத்திய மாநில அரசுகளின் தவறான பொருளாதார கொள்கைகளின் வெளிப்பாடுதான் என உணர்ந்த வெகு மக்களின் தேசிய மேடை (சூஞஆட)விடுத்துள்ள அறைகூவலுக்கிணங்கவும் பெங்களூர் நகரில் கடந்த நவம்பர் 26,27 தேதிகளில் நடைபெற்ற அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தேசிய செயற்குழு தீர்மானங்களின் அடிப்படையிலும் கீழ்க்காணும் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி மத்திய தொழிற்சங்கங்கள் எதிர்வரும் **2019 ஜனவரி 8-9 தேதிகளில் நடத்திடும் அகில இந்திய வேலை நிறுத்தத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் முழுமையாக கலந்துக்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.**

**மு.அன்பரசு**
பொதுச்செயலாளர்

பெறுநர்
அனைத்து ஊடகங்கள்